University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division

# தந்தி

இல: 1056 1970 ஜூன் 15 திங்கட் கிழமை ★ விலை சதம் 5

### சிம்மாசனப் பிரசங்கத்தில் அறிவிப்பு

# விலைவாசிகள் குறையும்: வங்கிகள் தேசியமயம்

**வாழ்க்கைச் செலவு உயர்வால் இப்போது கஷ்டப்படும் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க மக்கள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.**

கடந்த அரசாங்கத்திஞல் வெட்டப்பட்ட ஒரு கொத்து பங்கீட்டரிசியை மீண்டும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் குழந்தைகளின் பால்மா, ஜவுளிகள், மருந்து வகைகள் ஆகியவற்றின் விலை குறைக்கப்படும் என்றும் மகா தேசாதிபதி அறிவித்தார்.

கொழும்பு சுதந்திர ஞாபகார்த்த மண்டபத்தில், ஏழாவது நாட்டாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து மகா தேசாதிபதி சிம்மாசனப் பிரசங்க உரையை நிகழ்த்திஞர்.

மைசூர் பருப்பும், கொத்தமல்லியும் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டு பங்கீட்டுத் திட்டம் இன்றி பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் நாளாந்த பாவனைப் பொருட்கள் நியாய விலைக்கு விற்கப்படும் எனவும் சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டது.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மூன்று புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவப்படும் எனவும் தோட்டப் பாடசாலைகள் கையேற்கப்படுமெனவும் உயர் கல்விச் சட்டம் ரத்துச் செய்யப்படும் எனவும் சிம்மாசனப் பிரசங்கத்தில் மகா தேசாதிபதி குறிப்பிட்டார்.

மகா தேசாதிபதி சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:—

★ அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்க உரிமைகளின் மீது தற்சமயம் இருந்து வரும் எல்லா கட்டுப்பாடுகளும் அகற்றப்படும். ஒரு முழுமையான தொழிலாளர் உரிமைச் சாசனம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

தொழிற் சங்கங்களை முதலாளிகள் கட்டாயமாக அங்கீகரிக்கச் செய்வது, போனஸ் வழங்குவது ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவுகளை அதிகரிப்பது. முதலானவையும் இதில் அடங்கும்.

★ கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு அவர்களின் பொறுப்புகளுக்கு ஏற்ப சம்பள விகிதங்களுடன் இடமாற்றச் சேவை ஸ்தாபிக்கப்படும். அவர்கட்கு தொழில் உத்தரவாதமும் அளிக்கப்படும்.

★ வங்கி அமைப்பு முறை தேசியமயமாக்கப்படும். சகல அத்தியாவசியப் பொருட்களினதும் இறக்குமதியை அரசாங்கம் கையாளும். இலங்கையர் அல்லாதவர்களுக்கு காணிகள் விற்கப்படுவது சட்ட மூலம் தடைசெய்யப்படும். தனியார் கம்பனிகளுக்கும் முன்னைய அரசாங்கத்துக்கு வேண்டியவர்களுக்கும் காணி வழங்க ஏற்படுத்தப்பட்ட விசேட குத்தகை திட்டம் ரத்துச் செய்யப்படும்.

★ விவசாயிகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும். மகாவலி திசை திருப்பு திட்டம் சம்பந்தமான சபையின் அமைப்பும் அதிகாரங்களும் பரிசீலனை செய்யப்படும்.

★ கைத் தொழில்களுக்கும் வீட்டுப் பாவனைக்குமான மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும். அரசாங்கத்துறையிலுள்ள சகல பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படும்.

★ சோஷலிஸ, சுதந்திர குடியரசு நாடாக இலங்கையைப் பிரகடனப் படுத்த புதிய அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டு வரப்படும் எனவும் மகா தேசாதிபதி தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

★ பீடித் தொழில் போன்ற குடிசைக் கைத்தொழில்களிலும் தொழிலாளர்களுக்கு. குறிப்பாக பெண் தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவது ஒழிக்கப்படும். வாலிபர்களின் பிரச்சினைகளை ஆராய வாலிபர் விவகார, சேமநலத் திணைக்களம் ஒன்று நிறுவப்படும்.

★ மேற்கத்திய வைத்திய முறையுடன் ஆயுள்வேத, சித்த யூனானி வைத்திய முறைகளும் அபிவிருத்தி செய்யப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

### சபையில்

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் கூடியபோது மகா தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வயதில் இளையவரான பெலியத்த எம். பி. திரு. மகிந்த ராஜபக்ஸ பிரேரணையைப் பிரேரிக்க, மஹியங்கனை எம். பி. திரு. எட்வின் விக்கிரமரத்ன ஆமோதித்தார். (ர)

### பாராட்டு

மக்கள் அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு அரசியல் அவதானிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இந்த சிம்மாசனப் பிரசங்கம் முற்போக்கானது என்றும் நாட்டின் சகல பிரிவினருக்கும் நிவாரணம் அளிப்பதொன்றாகும் என்றும் அவர்கள் வர்ணித்துள்ளனர். (ர)

### மீனாட்சி



மிடி அகலட்,
படி உயரக்
கொடி உயர்த்த
குடியரசோங்குக!



பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா சிம்மாசனப் பிரசங்கு குறிப்பை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவாவிடம் கையளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டுக்குள் தூக்கிச் சென்று

# பத்துவயதுச்சிறுமியின் கற்பை அழித்தாராம்

## இரண்டு குழந்தைகளின் தந்தை கைதானுர்

பத்து வயதுச் சிறுமி ஒருத்தியை பலாத்கார மாகக் காட்டுக்குள் தூக்கிச் சென்று கற்பழித்த தாக, இரண்டு குழந்தைகளின் தந்தை ஒருவரை, பொலீசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள் ளனர்.

மூதூரில் நடைபெற்ற இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவ தாவது:-

மூதூர் வெளிச்ச வீட்டுக்கு அருகில் தன் பெற்றேருடன் வசித்து வந்தாள் பத்து வய துடைய முஸ்லிம் சிறுமி ஒருத்தி. சம்பவம் நடைபெற்ற தினம், அவள் மாத்திரமே வீட்டில் தனி யாக இருந்தாள். அவளது பெற் ரேேர் வேறு அலுவல் காரணமாக வெளியே சென்றிருந்தனர்.

பெற்ரேர் வெளியே சென்ற சில நிமிடங்களுக்குப் பின் அந் தச் சிறுமி சில பொருட்கள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ருள். கடையில் பொருட்களை வாங்கிய பின் வீட்டுக்குத் திரும் பிக் கொண்டிருந்த பொழுது, திடீரென்று அவளை நெருங்கி வந்த ஒரு நபர், அவளை அலாக்காகத் தூக்கிக் காட்டுக்குள் கொண்டு சென்று பலாத்காரமாக அவ ளைக் கீழே கிடத்தி அவள் மீது குற்றம் புரிந்தான்.

பயத்திஞலும், வலியைத் தாங்க முடியாமலும் சிறுமி அழுது கூக் குரலிடவே, அந்த சப்தத்தைக் கேட்டு அயலவர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தக்கு ஓடி வந் தார்கள்.

அவர்களைக் கண்டவுடன், அந் தக் காமாந்தகாரன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். உடனடியாக பொலீஸ் நிலையத்துக்குச் சென்று தான் பலாத்காரமாகக் கற் பழிக்கப்பட்டதாக முறைப்பாடு செய்தாள் அந்தச் சிறுமி.

இதனைத் தொடர்ந்து, மூதூர் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மெதவெல, ஐந்து வயதும் மூன்று வயதும் உடைய இரு குழந்தைகளுக்குத் தந்தை யான ஒரு முஸ்லிம் நபரை சந் தேகத்தின் பேரில் கைது செய்து தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)

## நெடுந்தீவில் பெண் கொலை

நெடுந்தீவில். ஒரு பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, யாழ் உதவி பொலீஸ் சுப்ரிண்டென் உட னடியாக ஸ்தலத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த பசுபதி என்ற அந்தப் பெண், இரும் புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. பொலீசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர். (க-226)

## பூனகரியில் ஒதுங்கிய சடலம் யாருடையது?

பூனகரி, கௌதாரிமுனை என்ற இடத்தில் கடற்கரையில் இனந் தெரியாத ஒரு நபரின் சடலம் வந்து ஒதுங்கியது.

சுமார் நாற்பது வயது மதிக்கத் தகுந்த அந்த ஆண் சடலம், இனங் காண முடியாத நிலையில் சிதைந்து போயிருந்தது. அதன் கழுத்தில், ஒரு குருசும் சங்கிலியும் காணப் பட்டது.

திடீர் மரண விசாரணைஅதிகாரி திரு. கனகரத்தினம் விசாரணை நடத்திய பின், சடலத்தை அங் கேயே புதைக்கும் படி உத்தரவிட் டார்- யாழ்ப்பாணம் பொலீ சார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (க-220)

## அரசியல் போட்டியால் தீ வைத்தனராம்

கல்கிசை, ஜூன் 14

கிரில்லப்பனையில் வரிசையாக ஐந்து கடைகளுக்குத் தீவைத்த தாக என். ஸி. அல்மெய்தா, கோபாலன் சுப்ரமணியம், எம். பிரேமதாஸா கோஸ்டா, கிளாட் வின் சேவியர், சுகதபால அல் மெய்தா ஆகியோர் கொழும்பு தெற்கு கூட்டு நீதிபதி திரு. அத்து ருபரான முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

எதிரிகள் சார்பாக ஆஜரான திரு. கிளாரன்ஸ் எம். பெர் ணண்டோ, மனுதாரும், எதிரி களும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்டவர் கள் என்றும், அரசியல் வஞ்சம் காரணமாக அவர்கள் மீது குற் றஞ் சுமத்தப்படுகிறது என்றும் கூறினுர்.

ஒவ்வொருவரும் தலா ரூபா 750 பிணையில் விடப்பட்டு, வருகிற ஜூலை 24-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர்களுக்கு உத் ரவிடப்பட்டது. (ய)

## ஜோர்டான்இராணுவதளபதி மயிரிழையில்உயிர்தப்பினர்

அம்மான், ஜூன் 14

ஜோர்தான் ராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் மஷூர் ஹாதிதா பிரயாணம் செய்த கார் மீது குண்டு வீசப்பட்டதால் கார் தீக்கிரையானது.

ஆனல் மேஜர் ஜெனரலுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. பாதுகாவலர்கள் ஐவர் தீக் காயங்களுக்கு உள்ளாஞர்கள். கார் மீது குண்டு வீசியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதமர் பஹ்ஜட் அல் த லோனி தெரிவித்தார்.

கடந்த வாரம் ஜோர்டான் தலை நகரான அம்மானில் ஜோர்டான் படையினருக்கும் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் இடை யில் இடம்பெற்ற சண்டையைத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் மேஜர் ஜெனரல் ஹாதிதா முக்கிய இடம்வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேஜர் ஜெனரல் மீது குண்டு வீச்சு தாக்குதல் இடம்பெற்றதை அடுத்து ராணுவத்தினரிடையே தீவிர கட்டுப்பாடு ஏற்பட வேண் டும் என ஜோர்டான் மன்னர் ஹுஸேன் உத்தரவிட்டுள்ளார். ஆங்காங்கே இடம்பெற்று வரும் சிறுசிறு கைகலப்புகளை உடனே அடக்கி விடும்படியும் மன்னர் உத் தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில், இதுவரை 500 வெளிநாட்டவர்கள் ஜோர்டானை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஜோர்டானில் இருந்து வெளி யேறி வந்தவர்கள் பேரூட்டில் புகலிடம் பெற்றுள்ளனர். இவர் கள் தங்களின் பயங்கர அனுப வங்களை விபரித்தார்கள்.

இரு அமெரிக்கப் பெண்கள் பல ஆடவர்களால் பயங்கரமான முறையில் கற்பழிக்கப்பட்டதாக ஒரு மருத்துவ தாதி தெரிவித் தார். "வியட்நாமில்கூட இப்படிப் பயங்கரம் நடக்கவில்லை" என அந் தத் தாதி கூறினுர்.

அமெரிக்கர்கள் பலர் குடும்பம் குடும்பமாக பீதியுடன் வாழ்கிருர் கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஆடையில் நெருப்புப் பற்றி இளம்பெண்பரிதாபமரணம்

ஆடையில் தீப்பற்றியதால் உடல் கருகிய பதினெட்டு வயதுப் பருவப் பெண் பரிதாபமாகமரணமானுள்-

இந்தச் சம்பவம் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தொலஸ் வல என்ற தோட்டத்தில் நிகழ்ந் தது-

முத்துலட்சுமி என்ற இளம் பெண்ணே இந்தப் பரிதாப மர ணத்திற்கு உள்ளானவராவார்- எரி காயங்களுடன் ஆபத்தான நிலை யில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கே மர ணமானுர்-

உணவு தயாரிப்பதற்காக அடுப்பு பற்ற வைக்கும்பொழுது இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது-

இரத்தினபுரி திடீர் மரண விசா ரணை அதிகாரி திரு- எம்- டபிள்யூ- பீரிஸ் மரண விசாரணை நடத்தி ஞர்- தீ விபத்திஞல் மரணம் சம்ப வித்ததாகத் தீர்ப்பளிதார்- (க)

## ஹம்ப்ரி போட்டி

மினிசோட்டா, ஜூன். 14

எதிர்வரும் அமெரிக்க செனட் தேர்தலில் தான் போட்டியிட இருப்பதாக முன்னுள் உப ஜனுதிபதி திரு. ஹூபேர்ட் ஹம்ப்ரி அறிவித் தார்,

## கமிஷன்

புளோரிடா, ஜூன், 14

பல்கலைக்கழக வன்முறைச் சம்பவங்கள் பற்றி ஆராய ஒன்பது பேரடங்கிய கமிஷன் ஒன்றை நியமித்துள்ளார் அமெரிக்க ஜனுதிபதி நிக்ஸன்.


### விரும்பியது கிடைத்தது

இலங்கை குடியரசாக்கப்படும்- சகல மக்களுக்கும் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப் படும்- வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்படும்- வெட்டிக் குறைத்த ஒரு கொத் தரிசி மீண்டும் வழங்கப்படும்- பாலுணவு, துணி, மருந்து முதலியவற்றின் விலைகள் குறைக்கப்படும்- கொத்தமல்லி, மைசூர்ப் பருப்பு பங்கீட்டு முறையில்லாமல் வழங்கப் படும்- அத்தியாவசிய தேவைப்பொருள்கள் நியாய விலைக் குக் கிடைக்கச் செய்யப்படும்- இளைஞர்களுக்குத் தொழில்நுட்ப, தொழில் முறைப் பயிற்சிகள் கிடைக்க வசதி செய்யப்படும்- தோட்டப் பாடசாலைகள் அரசாங் கத்தால் ஏற்கப்படும்- சகல வீடுகளும் வாடகைக் கட் டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்படும்- இன, மத, சாதி, மொழித் துவேஷப் பலாத்காரங்கள் கடுந் தண்டனைக்குள் கொண்டு வரப்படும்- சில்லறை வர்த்த கம் இலங்கையர் மயமாக்கப்படும்- இவைகளும் இவை போன்ற புரட்சிகரமான பல மாற்றங்களைத் தெரிவித் துள்ள சிம்மாசனப் பிரசங்கத்தை மக்கள் மனப்பூர்வ மாக வரவேற்பர் என்பது திண்ணம்-

தந்தி



### பிரசித்த ஏலவிற்பனை

நோர்வூட் லோறன்ஸ் பஜார் 3-ம் நிர். கடையில் வீ- ப. ஆண்டி பிள்ளை அன் சன்ஸ் என்ற விலாசத் தில் நகை அடைவு பிடிக்கும் வீ. ப. ஆண்டிபிள்ளை அவர்களிடம் 3-5-67, முதல் 29-3-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூலை மாதம் 1-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என் ஞல் விற்கப்படும்.

A. M. சோமசுந்தரம்,
வெந்திஸ் மேஸ்தர்.

அட்டன்.
11-6-70.

### பிரசித்த ஏலவிற்பனை

நோட்டன்பிறிட்ஜ் கடை வீதி ஏ - 4-ம் நிர். கடையில் நகை அடைவு பிடிக்கும் சி. கறுப்பையா பிள்ளை அவர்களிடம் 1-8-66 முதல் 30-4-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூன் மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என் ஞல் விற்கப்படும்.

A. M. சோமசுந்தரம்,
வெந்திஸ் மேஸ்தர்.

அட்டன்.
11-6-70.

### தந்தி சிறு விளம்பரங்கள்

#### வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவருத மலை யாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவ பாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை,

R. 66154


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினபுரியில் பயங்கர சம்பவம்:

# அம்மாவுடன் அருமை மகளும் கோரக் கொலை

### இரண்டொரு தினங்களில் இந்தியா செல்ல இருந்தனர்

**தனது குடும்பத்தினருடன் இன்னும் இரண்டொரு தினங்களில் இந்தியாவுக்குச் செல்ல இருந்த ஓய்வுபெற்ற தோட்டக் கணக்கப்பிள்ளை ஒருவரின் மனைவியும், இருபது வயதுப் பருவ மகளும் கர்ண கடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.**

இந்தப் பரிதாப சம்பவம், இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கொஸ்பலவின்ன என்ற இடத்தில் நடைபெற்றிருக்கிறது.

இந்த இரட்டைக் கொலை சம்பந்தமாக, பிரஸ்தாப ஓய்வுபெற்ற கணக்கப்பிள்ளையின் தகவலைத் தொடர்ந்து உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்ற இரத்தினபுரி பொலீசைச் சேர்ந்த குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. ஜி. சி. ஈ. பெரேரா விசாரணை மேற்கொண்டார்.

இந்தப் படுகொலை சம்பந்தமாக, பொலீஸ் நாய் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பயன்படுத்தப்பட்டது. சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு சில யார் தூரத்தில், இரத்தம் தோய்ந்த ஷேர்ட் ஒன்றை பொலீஸ் நாய் கண்டுபிடித்தது.

இந்தக் கோரக் கொலை நிகழ்ந்த இடத்தில் குற்றப்பிரிவு திணைக்களத்தைச் சேர்ந்த புகைபபடப் பிடிப்பு நிபுணர்கள் புகைப்படம் எடுத்தனர். கைரேகை அடையாள நிபுணர்கள் கைரேகைகளைப் பதிவு செய்து கொண்டனர்.

டபிள்யூ. காமாட்சி (வயது 55 - தாய்). வீ. ஜானகி (வயது 20 - மகள்) ஆகிய இருவருமே படுகொலை செய்யப்பட்டனர்.

ஓய்வுபெற்ற கணக்குப்பிள்ளையான திரு. கே. பி. எஸ். வெங்கடசபாபதி, படுகொலை செய்யப்பட்டுப் பரிதாபமாக மரணமான தனது மனைவியையும், பருவ மகளையும் அழைத்துக்கொண்டு, இரண்டொருதினங்களில் இந்தியாவுக்குச் செல்ல இருந்ததாகவும், பணமும், நகைகளும் வீட்டில் இருந்ததாகவும், அவர் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்குத்திரும்பிய பொழுது மனைவியும் மகளும் கொலை செய்யப்பட்டிருந்ததைக் கண்டதாகவும் கூறப்படுகிறது.

திரு. வெங்கடசபாபதியின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்து கொண்ட பொலீசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்தப் படுகொலை சம்பந்தமாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. (க)

### உத்தரத்தில் தூக்கிட்டு உயிரை மாய்த்தாராம்

"சுமார் 2-30 மணியளவில் பக்கத்து வீட்டுத் தோட்டத்துக்கு கொட்டுக்கொளை பறிப்பதற்காகச்சென்றேன். மூன்று மணியளவில் திரும்பிய பொழுது, வீட்டில் படுத்திருந்த எனது கணவரைக் காணவில்லை. சுற்று முற்றும் தேடிப் பார்த்த பொழுது, உத்தரத்தில் அவர் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்குவதைக் கண்டேன்."

சாளோ சிங்கோ என்பவரின் திடீர் மரணம் சம்பந்தமாக முனவத்துபாகபத்துவ சடுதி மரண விசாரணை அதிகாரியான ஆயுர்வேத டாக்டர் டி. டி. ஜே. ஔஷதரத்தின நடத்திய மரண விசாரணையின் போது காலஞ்சென்றவரின் மனைவியான செஸிலின் நோனா என்ற பெண் மேற் கண்டவாறு கூறினர்.

டி. மென்டிரிஸ். ஹொரண ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர் பெரேரா ஆகியோரர் சாட்சியம் அளித்த பின்னர், மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினர். (க)

### வெளிமடையில் வர்த்தகர் கொலை

வெளிமடையில் வர்த்தகர் ஒருவர் பயங்கரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

எம்பிட்டியாவத்தை என்ற இடத்தில் நிகழ்ந்த இந்தப் படு கொலையில், ஆர். பி. ஜோன் என்ற வர்த்தகரே மரணமானர்.

இந்தக் கொலை சம்பந்தமாக, சந்தேக நபரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (க)

### மார்புடன் அணைத்தவண்ணம் முத்தமழை பொழிந்தார்

"ஒரு நாள் நான் அறையில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்த பொழுது, விடியும் நேரத்தில் யாரோ என்னை இறுக அணைத்து, முத்தம் சொரிவதை உணர்ந்தேன். அது சிறி என்பதை உணர்ந்து நான் அவரைத் தள்ளி விட்ட பொழுது, அவர் என்னை மிகவும் காதலிப்பதாகவும், இந்தச் சம்பவத்தை யாரிடமும் சொல்ல வேண்டாமென்றும் கூறினர். இப்படித்தான் எங்கள் காதல் ஆரம்பமாகியது".

கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஈ. எப். டி. சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனும்ச வழக்கு ஒன்றில் சாட்சியம் அளித்த மனுதார் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில், நிமலாவதி என்ற பெண், தனக்கும் தனது குழந்தையான ரமணிக்கும் சிறிசேன என்பவரிடமிருந்து ஜீவனும்சம் பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

மனுதாரான நிமலாவதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது—

"எதிர்மனுதார் எனது தூரத்து உறவினர். எங்கள் வீட்டுக்கு சுமார் கால் மைல் தூரத்தில் அவர் வசித்து வந்தார். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் எங்கள் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அவரது வீட்டில் நடந்த ஒரு "தான" வைபவத்திற்குச் சென்றிருந்தோம். அப்பொழுதுதான் முதன் முதலாக நான் எதிர்மனுதாரைச் சந்தித்தேன்.

"தானம் நடைபெற்ற தினத்துக்கு முதன் நாள் இரவு நான் எனது சகோதரியுடன் வீட்டின் முன் அறையில் நித்திரை செய்தேன். எதிர்மனுதார் தானத்துக்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். விடியற்காலையில் என்னை யாரோ இறுக அணைத்துக் கொண்டு, என்னை முத்தமிடுவதை உணர்ந்தேன். அங்கே எதிர்மனுதார்தான் அப்படிச் செய்து கொண்டிருந்தார். அன்று முதல் நாங்கள் இருவரும் காதலரானேம்.

"அடிக்கடி எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்த எதிர்மனுதார் என்னுடன் உடலுறவு கொண்டார். எங்கள் தொடர்பை பக்கத்து வீட்டுப் பெண்ணின் மூலம் எனது சகோதரி அறிந்து கொண்டு, என்னை விசாரித்தார். பின்னர் எனது சகோதரி தனது குழந்தையுடன் எங்கள் வீட்டில் வந்து வசித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்மனுதார் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வர முடியவில்லை. இரு சந்தர்ப்பங்களில் மாத்திரமே என்னுடன் உடலுறவு கொண்டார்.

"பிறகு எனது சகோதரி எங்கள் வீட்டை விட்டு வெளியேறிய பின், பழையபடி எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரத் தொடங்கிய எதிர்மனுதார் என்னுடன் கணவன் மனைவி போல் நடக்கத் தொடங்கினர்."

இந்தக் கட்டத்தில் வழக்கு விசாரணை ஜூன் மாதம் 27-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (க)

### மனைவியுடன் வாழ்ந்த கணவருக்கு ஆசைநாயகி அழைப்புக் கடிதம்

"என் கணவர் என்னுடன் வாழ்ந்து வந்தபோதே அவரது ஆசைநாயகியிடமிருந்து அவருக்கு அழைப்புகள் வந்தன. ஒரு நாள் நான் என் கணவரைத் தேடிச் சென்றபொழுது. அவரது ஆசை நாயகி என்னை அடித்து விரட்டினர்"

கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஈ. எப். டி. சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனும்ச வழக்கில் மனுதார் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில், வெல்லம்பிட்டியைச் சேர்ந்த வி. பி. எமிலிஹாமி என்ற 32 வயதுப் பெண், தமது கணவரான பி. எச். தனபாலா என்பவரிடமிருந்து ஜீவனும்சம் பெற்றுத்தருமாறு கோரியிருந்தார்.

மனுதார் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது.—

"எதிர் மனுதார் என்னை 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருமணம் செய்தார். அதன் மூலம் எனக்கு இரு குழந்தைகள் பிறந்தன. 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் என்னைவிட்டுப் பிரிந்தார். அவர் என்னுடன் வாழ்ந்த காலத்தில் என்னை மிகவும் துன்புறுத்தினர்.

"என் கணவர் என்னுடன் வாழ்ந்த காலத்தில், நந்தாவதி என்ற அவருடைய ஆசை நாயகியிடமிருந்து அவருக்குப் பலமுறை அழைப்புக் கடிதங்கள் வந்தன. பிறகு அவர் யட்டிஹன என்ற இடத்துக்குச் சென்றுவிட்டார். நான் அவரைத் தேடிச் சென்ற பொழுது, அங்கே பல பெண்கள் இருந்தனர். அவர்கள் என்னைத் தாக்கினர்கள். எனது கணவரின் ஆசைநாயகியான நந்தாவதியும் என்னை தாக்கினர்"

"என் கணவரிடமிருந்து எனக்கும் எனது குழந்தைகளுக்கும் ஜீவனும்சம் பெற்றுத்தர ஏற்பாடு செய்யுங்கள்" இப்படி அவர் கோரினர்.

எதிர் மனுதாரின் சாட்சியத்தையும் விசாரித்து அறிந்த நீதவான், வாதிக்குப் பணம் கட்டத் தேவையில்லை யெனக் கூறி, பிள்ளைகள் இருவருக்கும் சேர்த்து மாதம் 50 ரூபா கட்டும்படி உத்தரவிட்டார். (க)

### குத்துச்சண்டை வீரரின் மகள் கணவனைக் கோடரியால் கொன்றுள்

லண்டன், ஜூன் 14

கணவனைக் கொலை செய்ததாக ஒப்புக்கொண்ட 30 வயதான ஜோன் லிம்கின்சன் என்ற பெண் மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாள்.

முன்னாள் உப அதிபார குத்துச்சண்டை சாம்பியன் ஜெனிடெனியின் புதல்வியான ஜோன் லிங்கின்சன் மூளைக் கோளாறினல் பாதிக்கப்பட்டிருப்பதாயும், அவர் மேலும் பல தை மோசக் கொலைகளைச் செய்யக்கூடும் என்றும் மனேதத்துவ நிபுணர் ஒருவர் நீதிமன்றத்தில் கூறினர்.

தங்கள் நாட்டுப்புற வாசஸ்தலத்தில் வைத்து கோடரியால் வெட்டித் தமது கணவனைக் கொன்றதாக திருமதி லிங்கின்சன் ஒப்புக் கொண்டார்.

9 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்த லிங்கின்சன் தம்பதிகள் லண்டனுக்கு 9 மைல் தூரத்தில் வசித்து வந்தனர்.

சென்ற ஆண்டு அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு வந்த இந்த தம்பதிகள், ஈஸ்டர் தினம் வரை மகிழ்ச்சிகரமாக இருந்ததாய்க் கூறப்பட்டது.

கணவன் நித்திரையிலிருந்த போது அவரைத் கோடரியால் வெட்டிக் கொன்றுர் மனைவி. (ய)

### வங்கிப் பணம் தப்பி விட்டது

சாவகச்சேரி, ஜூன் 14

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளைக்குள் திருடர்கள் பணத்தைக் கொள்ளையடிக்கவென்று புகுந்து, அங்கு பணம் சேகரித்து வைத்துள்ள இரும்புப் பெட்டியை உடைக்க எடுத்துக் கொண்ட முயற்சியில் தோல்வி கண்டனர்.

பெட்டி உடைக்கப்படவில்லை என்றும், பணம் எதுவும் திருடப்படவில்லை என்றும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். கிளிநொச்சிப் பொலீசார் புலன் விசாரணை நடத்தி வருகிறர்கள். (51)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை, — கொழும்பு.

விற்குமிடம்:—

34, செட்டியார் தெரு,

கொழும்பு — 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்; 26584





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை குடியரசாகும்

**இன, மத நம்பிக்கையை, சாதியை அல்லது மொழியை அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு நபருக்கும் எதிராகப் பலாத்காரத்தைத் தூண்டும் எவரும் கடுந்தண்டனைக்கு ஆளாக்கப்படுவர் என்றும் சிம்மாசனப் பிரசங்கத்தில் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியரசு

சகல பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் வழங்குவதுடன் ஒரு சோஷலிச ஜனநாயகத்தின் குறிக்கோளினை நிலைநாட்டுதற்கு உறுதி பூண்ட சுயேச்சையான, தனியாட்சியான, சுதந்திரமானதொரு குடியரசாக இலங்கையைப் பிரகடனப்படுத்தும் ஒரு புதிய அரசியலமைப்பின் நகலைத் தயாரித்து, ஏற்றுக் கொண்டு, செயலாற்றும் பொருட்டு ஓர் அரசியல் நிர்ணய சபையாக இயங்குதற்கு ஜனநாயக முறைப்படி வழங்கப்பட்ட தங்கள் வாக்குரிமைகளைக் கொண்டு மக்கள் உங்களுக்கு ஒரு தெளிவான உரிமை ஆற்றலை அளித்துள்ளார்கள்.

## நிர்வாகத்தில் மாற்றம்

எனது அரசாங்கம் நிர்வாகத்தை முற்றாக மாற்றியமைத்து அதன் ஜனநாயகத் தன்மையை இன்னும் அதிகரிக்கச் செய்து பின்வருவனவற்றைக் கொண்டு அதனை மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக்கும்–

(1) தெரிவு செய்யப்பட்ட ஊழியர் சபைகள்;

(2) அரசாங்க அலுவலகங்களில் ஆலோசனைக் குழுக்கள்;

(3) பிரதேசிய அடிப்படையிலான மக்கள் குழுக்கள்.

உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களின் (அதிகார சபையிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் சேவை செய்யும் ஊழியர்கள்) சேவை நிபந்தனைகளும் நியதிகளும் அவர்களுக்கு நன்மைபயக்கும் வகையில் அரசாங்க சேவை ஊழியர்களின் சேவை நிபந்தனைகள், நியதிகள் ஆகியவற்றைப் போன்று படிப்படியாகச் சமமாக்கப்படும்.

## தண்டனை அகற்றப்படும்

அரசியல் காரணங்களுக்காக முன்னைய அரசாங்கத்தினால் பழி வாங்கப்பட்ட அரசாங்க சேவை ஊழியர்கள் மீதான தண்டனைகள் அகற்றப்படும்.

ஆயுதப் படைகளும் பொலீஸ் சேவையும் மக்களின் தேசிய, முற்போக்கு அபிலாஷைகளுக்கு இணக்கமாகவும் அவர்களின் சித்தத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் சீர்திருத்தப்படும். அவர்களின் நியாயமான மனக்குறைகள் நிவர்த்திக்கப்படும்.

## செலாவணிச் சான்றிதழ் திட்டம்

இறக்குமதிப் பொருட்கள் சம்பந்தப்பட்டவரை கைத்தொழிற்றுறை மூலப் பொருட்கள் உட்பட பலவகை இறக்குமதிப் பொருட்களினதும் விலைவாசிகளை 55 சத வீதத்தால் உயர்த்தியதுடன் சகல பொருட்களினதும் விலைகளையும் அதிகரிக்கச் செய்துள்ள அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் மீண்டும் பரிசோதனை செய்யப்படும்.

## இலங்கையர் மயம்

சில்லறை வர்த்தகம், இலங்கையர்களான சில்லறை வர்த்தகர்களாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் அரசாங்க விற்பனவு நிலையங்களாலும் நடாத்தப்படும்.

விநியோக அமைப்பில், இலங்கையர்களான சில்லறை வர்த்தகர்களுக்கு அவர்களுக்குரிய இடம் உறுதிப்படுத்தப்படும்.


## கடன் மற்றும் வசதிகள்

சிறிய உற்பத்தியாளர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், இன்னும் தாராளமான, இலகுவான கடன் வசதிகள் மூலமும் மலிவான உரம், தோட்ட உபகரணங்கள், தொழில்நுட்ப உதவிகள், உரிய சந்தைப்படுத்தல் வசதிகள், ஸ்திர விலை ஆகியன மூலமும் நிவர்த்திக்கப்படும்.

வசதிகளும் விஸ்தரிக்கப்படும். மீன் பிடியாத காலங்களில் மீனவர்களுக்கு உதவுவதற்கான திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

## பெருங்கைத்தொழில்கள் தேசியமயம்

கனரக இயந்திரக் கைத்தொழில்களும் மூலதனப் பொருட் கைத்தொழில்களும்



மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ சிம்மாசனப் பிரசங்கத்தை வாசிக்கிறார். (ல)

விவசாயம், விசேடமாக உணவு உற்பத்தி, விவசாயிக்கு உண்மையிலேயே இலாபகரமான தொழிலாகச் செய்யப்படும். இதனால் விவசாயி ஒரு சிறந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்க வசதியேற்படும்.

கிராம மக்களைக் கடன் பளுவிலிருந்து விடுவிக்கவும் காணிகளை அபிவிருத்தி செய்யவும்

## வட, கிழக்கில் பல்கலைக்கழகம்

காணித் துண்டுகளை ஒன்றுபடுத்தவும் கிராமிய நிலங்களுக்கான உறுதிப் பத்திரங்களைச் சீர்படுத்தவும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

நிலமில்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காகத் தோட்டங்களிலுள்ள எல்லையோர நிலங்களையும் கவனிப்பாரற்றுக் கிடக்கும் நிலங்களையும் எடுத்துக் கொள்வது உட்பட மற்றும் பல நடவடிக்கைகள் மூலம் கிராமிய வாழ்வின் பொது அம்சமாக இன்றுள்ள மோசமான நிலமின்மைப் பிரச்சினையையும் நிலத் தட்டுப்பாட்டுப் பிரச்சினையையும் தீர்க்க எனது அரசாங்கம் பிரயத்தனம் எடுத்துக் கொள்ளும்.

## மீனில் தன்னிறைவு

இலங்கையை மீன் தேவையில் தன்னிறைவடையச் செய்யும் நோக்கத்துடன் மீன்பிடித் தொழில் ஒரு பிரதான தொழிலாகத் துரிதமாக எந்திர மயமாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

நன்னீர் மீன்பிடித் தொழில் அபிவிருத்தி செய்யப்படும்.

நவீன மீன்பிடி முறைகளைக் கையாளத் தனிப்பட்ட மீனவர்களுக்குச் சகல ஊக்கமும் அளிக்கப்படும். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவதுடன் அவர்களது சமூக

மற்றும் உசிதமான அடிப்படைக் கைத்தொழில்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமானவையாக இருக்கும். ஏனைய கைத்தொழில்கள் கூட்டுறவுத் துறைக்கும் தனியார் துறைக்கும் அளிக்கப்படும்.

தனியார் துறை உடைமையை இலங்கையர் மயமாக்கும் கொள்கை தீவிரமாக அமுல் நடாத்தப்படும்.

வெளிநாட்டு, உள்நாட்டுக் கொம்பனிகளில் அரசாங்கம் பங்குகள் பெறுவதற்கான சட்ட ஏற்பாடு செய்யப்படும்.

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலுமுள்ள கைத்தொழில்கள் வெளிநாட்டு இறக்குமதிகளால் பாதிக்கப்படாதிருக்கத்தக்க பாதுகாப்பளிக்கப்படும்.

## நெசவுத் தொழில்

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மலிவான விலையில் ஒழுங்காக நூல் வழங்கப்படுவதன் மூலமும் உரிய சந்தைப்படுத்தல் வசதிகளைச் செய்தளிப்பதன் மூலமும் மற்றும் நடவடிக்கைகள் மூலமும் இத்தொழில் இன்று அனுபவிக்கும் அவல நிலையிலிருந்து மீட்கப்படும்.

சகல மட்டங்களிலும் இலங்கையருக்குத் தொழிற் தேர்ச்சிகளிலும் தொழில் நுட்பத்திலும் பயிற்சியளிக்க விரிவான திட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

வயோதிப காலத்துக்கான அனுகூலங்கள் உட்பட விரிவான சமூகக் காப்புறுதித் திட்டமொன்றும் தேசிய இளைப்பாற்றுச் சம்பளத் திட்டம் ஒன்றும் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

## வயோதிபருக்கு

ஊழியர்களுக்குப் பொழுதுபோக்கு, விடுமுறை வசதிகளும் வயோதிபர்களுக்கும் வலுக்குறைந்தவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் விரிவான, ஸ்தாபன ரீதியான பராமரிப்பளிக்கப்படும்.

நாட்டைத் துரிதமாகக் கைத்தொழில் மயமாக்குவதற்கும் நீர்ப்பாசன, மின்சார வளங்களை விஸ்தரிப்பதற்கும் கிராமப் பொருளாதாரத்தைப் புனரமைப்பதற்கும் மீன்பிடித் தொழிலை வளர்ப்பதற்குமான தொரு வேலைத் திட்டம் நகரங்களிலும் கிராமங்களிலும் பெருமளவில் வேலைவாய்ப்புக்களை அளிக்கும்.

## கிராமக் குளங்கள்

கிராமக் குளங்களைப் பழுது பார்த்து நன்னிலையில் வைத்திருத்தல், வீடுகளையும், வீதிகளையும் நிர்மாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பொது வேலைத் திட்டத்தை எனது அரசாங்கம் மேற்கொள்ளும். இதனால் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்குத் தங்கள் தாய்நாட்டிற்குச் சேவை செய்யவும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் கிட்டும்.

அரசாங்கத் துறையிலுள்ள சகல பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படும். நிர்வாக அமைப்பு சீர்திருத்தப்படுவதால் புதிய அரசாங்கப் பகுதிகள் உருவாக்கப்படுவதுடன் நிர்வாக ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கான மற்றும் வாய்ப்புக்களும் ஏற்படும்.

சாதாரண பிரஜை ஒருவர் குறைந்த செலவில் வாழ்க்கை நடாத்துவதற்கு வகை செய்யும் நடவடிக்கைகளை எனது அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

# நாடாளுமன்ற கூட்டத் தொடர் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடர் நேற்று காலை 11.50 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடர் ஆரம்பத்தைக் கண்டுகளிக்கவென ஆயிரக்கணக்கான மக்கள் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது நாடாளுமன்றத்தைச் சுற்றி வீதி ஓரங்களில் நிரம்பிவழிந்தனர். திரண்டு காணப்பட்ட மக்கள் கூட்டத்தை பொலீஸார் ஒருவாறு கட்டுப்படுத்தினர்.

## டட்லி வரவில்லை

காலை 11.35 மணிக்கு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தை வந்தடைந்தார். பிரதமரைக் கண்ட மக்கள் கூட்டம் "ஜெயவேவா" கோஷம் எழுப்பி அவரை வரவேற்றது.


மதுவையும் சூதாட்டத்தையும் கைவிட்டு
37000 பேர் பாவித்துவரும்

**ஸ்ரீராம வாசனைப்புகை**

கண்திருஷ்டி, சொற்தோஷம், கிரகாதிப்பலன் முதலியவற்றை ஒழித்து, குடும்பத்தில் முன்னேற்றம் அளித்து, வியாபாரத்தில் வெற்றி கண்டு, பகைவர் ஒழித்து கடன் கிட்டி உங்களை லட்சாதிபதியாக்க வல்லது.

ஆயிரக்கணக்கான நற்சான்றுப் பத்திரங்கள் இருக்கின்றன, நீங்களும் பாவித்துப் பாருங்கள்.

★ ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25 ★ மூன்று மாத பாவனைக்கு ரூ.7-50. வி. பி. பி- யிலும் அனுப்பப்படும்.

பகைவர்களை அடக்கி, பரீட்சை பந்தயம், வழக்கு, மற்றும் சென்ற இடமெல்லாம் வெற்றியை அடைந்து நினைத்த காரியம் கைகூடுவதற்கு பாவியுங்கள்.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

விலை 15/50 மட்டுமே

★ பெயருக்கு விசேஷமாக மந்திரம் செபித்து பக்குவமாய் தயாரிக்கப்படும் யந்திரத்தின் விலை 22-50. ★ வியாபார ஸ்தலங்களில் வைத்து விளக்கேற்றுவதற்கு உகந்த 6"X5" அளவிலான யந்திரத்தை 27/50 ரூபாவுக்கு செய்து தருவோம். வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

வேறு எந்தக் காரணத்திற்கும் தவறாத நிவர்த்தி செய்து கொடுக்கப்படும். வசியம் சம்பந்தப்பட்டவை விசேஷமாகக் கவனிக்கப்படும். காதலில் வெற்றிபெற்று, பெற்றோரின் விருப்பத்தை 3 நாட்களில் பெற்றுக்கொடுக்கப்படும். இருவருடைய பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற

**நீலன் கந்தசாமி,**

லக்சல கட்டிடம், நிட்டம்புவ.


இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 15 ஜூன் 1970.

Thanthi 5. Gunasena Mawatha, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org